# DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No.46/2024**

Deposition of Witness of PW5

| | | | |
|---|---|---|---|
| Name | : S.இந்துஜா | Calling | : |
| Father/Husband's Name | : | Age | : |
| Village | : | | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 12th பிப்ரவரி 2026.

எதிரி ஆஜரில் இல்லை.

சாட்சி Video Conference மூலம் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது சென்னை காவல்தலைமையகத்தில் உள்ள கணினி பிரிவில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 02.10.2018 ம் தேதி 11.45 மணிக்கு மொடக்குறிச்சி காவல் நிலைய பொறுப்பில் இருந்தபோது மொடக்குறிச்சி எம்.வேலம்பாளையம் 153, பாரதியார் வீதியை சேர்ந்த ஜெகதீஸ்வரன் த/பெ பழனிசாமி என்பவர் நிலையம் ஆஜராகி தன் வீட்டிற்குள் நுழைந்து திருட முயற்சி செய்ய வந்த நபர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கொடுத்த புகாரை பெற்று 02.10.2018ம் தேதி காலை 11.45 மணிக்கு மொடக்குறிச்சி நிலைய குற்ற எண்.349/2018 இதச பிரிவு 380, 511 இதச ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** முதல் தகவல் அறிக்கையின் அசலையும், புகாரின் அசலையும் இணைத்து ஈரோடு நீதித்துறை நடுவர் எண்.3 அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். மற்றொரு நகலை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு மேல் விசாரணைக்காக வைத்தேன். ஒரு நகலை எனது புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டேன்.

அன்றைய தினமே 12.45 மணிக்கு சம்பவ இடம் சென்று பார்வை மகஜர், மாதிரி வரைபடம் சாட்சிகளின் முன்னிலையில்தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இந்த வழக்கில்

VIJAYAKUMAR K Digitally signed by VIJAYAKUMAR K Date: 2026.02.12 19:00:29 +0530

சம்பந்தப்பட்ட நபர்கள் சம்பந்தமாக நான் விசாரணை மேற்கொண்டு வந்த சமயத்தில் நான் பணிமாற்றம் ஆகி சென்று விட்டதால் வழக்கு கோப்பினை புலன் விசாரணைக்காக அடுத்து வந்த உதவி ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். புகார்தாரர் மற்றும் பார்வை மகஜர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இது சம்பந்தமாக என்னை காவல்நிலைய ஆய்வாளர் விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

புகாரில் வலது பக்க மேல்பகுதியிலும், இடது பக்க கீழேயும் கையெழுத்திற்கு கீழ் தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. புகாரில் மேலிருந்து 3 வது வரியில் தேதி அடித்தல் திருத்தமாக காணப்படுகிறது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் காலம் 3C ல் சம்பவம் நடந்த நேரம் குறிப்பிடவில்லை என்றால் குறிப்பிட்டுள்ளேன். முதல் தகவல் அறிக்கையில் காலம் 15 ல் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட தேதி உள்ளது, ஆனால் நேரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.இந்த வழக்கில் தனிப்பட்ட சாட்சிகள் யாரையும் நான் விசாரிக்கவில்லை என்றால் ஞாபகம் இல்லை. புகார்தாரரை அழைத்து சென்று அடையாள அணிவகுப்பு ஏதாவது நடத்தப்பட்டதா என்றால் இல்லை. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் புகார் எதுவும்பெறப்படவில்லை என்றும் அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பார்வை மகஜர், மாதிரி வரைபடம் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.02.12 19:00:35 +0530

# DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No.46/2024**

Deposition of Witness of PW4

| | | | |
|---|---|---|---|
| Name | : வசந்தகுமார் | Calling | : |
| Father/Husband's Name | : | Age | : |
| Village | : | | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 12th பிப்ரவரி 2026.

எதிரி ஆஜரில் இல்லை.

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் கவுந்தப்பாடியில் வசித்து கொண்டு சிவில் கான்ட்ராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.10.2018 அன்று அதிகாலை 1.30 மணியளவில் ஜெகதீஸ் வீட்டில் இரவு திருடு போனது. போலீஸார் பகல் 12.45 மணிக்கு வந்து போலீஸார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் வரைந்தார்கள். அதில் நானும், சதீஸ்-ம் என்பவரும் கையெழுத்து செய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான்.**பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

## எதிரிதரப்பு குறுக்கு விசாரணை

புகார்தாரர் ஜெகதீஸ்-ம் நானும் சொந்தக்காரர்கள் என்றால் சரிதான். இரவு சம்பவம் நடந்ததாக தொலைபேசியில் தகவல் சொன்னார் என்றால் சரிதான். காவல்துறையினருக்கும் தகவல் சொல்லி அவர்களும் வந்து விட்டார்கள் என்றால் சரிதான். இரவே போலீஸார் வந்து அக்கம் பக்கம் அனைவரையும் விசாரித்து கொண்டு தேவைப்பட்டால் காவல்நிலையம் வரச்சொல்வோம் என்று சொல்லிவிட்டு சென்றார்கள் என்றால் சரிதான்.

VIJAYAKUMAR K Digitally signed by VIJAYAKUMAR K Date: 2026.02.12 19:00:41 +0530

நான் சம்பவ நடந்த அன்றே வந்துவிட்டேன் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னபடி எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், புகார்தாரர் எனக்கு உறவினர் என்பதால் நான் பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.02.12 19:00:46 +0530